திருவள்ளூர் மாவட்டம் ஆவடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 33வது வார்டு சக்தி கனோப்ளாஸ் பகுதி பூங்காவில் 39.90 லட்சம் மதிப்பீட்டில் ஆழ்துளை கிணறு அமைத்தல், நடைபாதை விளையாட்டு உபகரணங்கள், திறந்தவெளி உடற்பயிற்சி உபகரணங்கள் மற்றும் புல் தரை அமைத்தல் பணிகளுக்கான அரசு ஒப்புதல் அளிக்கப்பட்டு அதன் பணிகள் துவக்க விழா நடைபெற்றது.. இதனை முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழகச் செயலாளருமான சா.மு. நாசர் எம்.எல்.ஏ அடிக்கல் நாட்டு திட்டப்பணிகளை துவக்கி வைத்தார்.. இதனை தொடர்ந்து பூங்காவை பார்வையிட்டு பராமரிப்பின்றி கிடந்த உபகரணங்கள், கழிவறைகள், நடைபாதைகள், மின் கோபுரவிளக்குகள் என அடிப்படை வசதிகளை சரி செய்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டும் என அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார் இந்த நிகழ்ச்சியில் ஆவடி மாநகர மேயர் உதயகுமார், ஆவடி மாநகர ஆணையர் ஷேக் அப்துல் ரகுமான், மண்டல குழு தலைவர் ஜி.ராஜேந்திரன், மாநகர செயலாளர் சன் பிரகாஷ், தலைமை செயற்குழு உறுப்பினர் நடுகுத்தகை கே.ஜெ.ரமேஷ், மாமன்ற உறுப்பினர் ஹரி, உள்ளிட்ட அரசு அதிகாரிகள் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தா.இளையஅருணா தலைமை! ஜே.ஜே.எபினேசர், இரா.லட்சுமணன், ஜெபதாஸ்பாண்டியன் முன்னிலை !

ஆர்.கே.நகர் முன்னாள் பகுதிச் செயலாளர் வெ.சுந்தரராஜன் இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி !

அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சி.வி.எம்.பி.எழிலரசன்,இரா.கிரிராஜன் நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்கள்!

சென்னை அக்:29

ஆர்.கே.நகர் முன்னாள் பகுதி செயலாளர் வெ.சுந்தரராஜன் இரண்டாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நாளை (30.10.2023 திங்கள்கிழமை) மாலை 4.மணியளவில் தண்டையார்பேட்டை மார்க்கெட் எல்லைமுத்தம்மன் கோவில் அருகில் நடைபெறுகிறது.

மாவட்டச் செயலாளர் தா.இளையஅருணா தலைமை வகிக்கிறார்.ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, முன்னிலை வகிக்கிறார்.

சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை, பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு,

கழக மாணவர் அணி செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன், ஆகியோர் நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்கள்.

இரா.லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ்பாண்டியன், ஆர்.வெற்றிவீரன், நேதாஜி யு.கணேசன், ஏ.ரமேஷ்பாபு, சி.மணிகண்டன், இர.பொன்இளவரசன், கட்டீஸ்.ப.சோம சுந்தரமூர்த்தி,இ.ரவிக்குமார், என்.அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, மு.வேதலட்சுமி, கே.பி.சதீஷ்குமார், பொ.துராஜா, என்.எம்.கதிரேசன், தா.வ.மு.கஜேந்திரன், நா.கோதண்டன், மா.நாகராஜன்,ப.குமார், ச.தமிழ்ச்செல்வன், வீ.வடிவேலு, எம்.எம்.சாமி, பி.கே.மூர்த்தி, ஆர்.ரமேஷ், பி.அன்பழகன், வி.முத்து,கே.மோகன், சா.திருப்பதிசாமி, டி.ஆர்.தணிகாசலம், மா.ரூபசங்கர், எரிமலை.பி.எல்.பாலு, பா.நரேஷ்குமார், வி.ஞானசேகரன், சா.சம்பத், த.அறிவழகன், மோ.ரவிக்குமார், ரெசிடென்சி.சி.சதீஷ், எஸ்.சத்திஸ்வரி, ந.ம.மகேஷ்குமார், நி.எழிலரசன்

இதில் கலாநிதிவீராசாமி எம்.பி,இரா.கிரிராஜன் எம்.பி,ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, ஐட்ரீம் ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ, இரா.மதிவாணன், பி.டி.பாண்டிசெல்வம், இரா.நரேந்திரன், ஆர்.எம்.டி. ரவீந்திரன், ந.மனோகரன், இரா.கருணாநிதி, எஸ்.ஆர்.கமலக்கண்ணன், மு.கோபி,நாகம்மை கருப்பையா, வி.தயாளன், வ.பெ.சுரேஷ், இரா.செந்தில்குமார், க.ஜெயராமன், அ.முருகன், வே.சிவக்குமார், நா.சண்முகம், கி.ராஜேந்திரன், எல்.அருளரசன் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொள்கின்றனர்.

வெ.சு.பிரபாகரன், வெ.சு.சத்தியநாராயணன் ஆகியோர் நிகழ்ச்சி ஏற்பாடு செய்துள்ளனர்.

எஸ்.டி.சண்முகம் தலைமை! இரா. கருணாநிதி - க.ஜெயராமன் முன்னிலை!

அமைப்புசாரா ஓட்டுநர் அணி சார்பில் நீட் விலக்கு கையெழுத்து இயக்கம் நிகழ்வு!

தா.இளைய அருணா துவக்கி வைக்கிறார்! கலாநிதி வீராசாமி - ஆர்.டி.சேகர் பங்கேற்பு!

சென்னை, அக்.29-

சென்னை வடக்கு மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணியின் சார்பாக "நீட் விலக்கு நம் இலக்கு" எனும் மாபெரும் கையெழுத்து இயக்க நிகழ்வு இன்று (29.10.2023 ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணியளவில் 45 வது வட்டத்தில் அமைந்துள்ள அன்னை வேளாங்கண்ணி மேல்நிலைப்பள்ளி சாஸ்திரி நகரில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.கருணாநிதி மற்றும் பெரம்பூர் தெற்கு பகுதி செயலாளர் க.ஜெயராமன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

அமைப்புசாரா ஓட்டுநர் அணியின் அமைப்பாளர் எஸ்.டி.சண்முகம் தலைமையில் நடைபெறும் நிகழ்ச்சியை சென்னை வடக்கு மாவட்ட செயலாளர் தா.இளைய அருணா துவக்கி வைக்கிறார்.

அது சமயம் வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி எம்.பி., பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.சேகர், மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் இரா. நரேந்திரன், மாவட்ட கழக நிர்வாகிகள் எஸ்.ஆர். கமலக்கண்ணன், வி.தயாளன், பொதுக்குழு உறுப்பினர்கள்

எ.தமிழ்செல்வன், க. அமுல், டி.கமலக்கண்ணன், ப.மதிவணன் மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் BLA_2 மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில் திருவொற்றியூர் தொகுதிக்கு உட்பட்ட கிழக்கு பகுதிக்கு அடங்கிய பாகம் என் 151 முதல் 311 வரை உள்ள BL2 பாக முகவர்கள் மற்றும் பணிக்குழுவினர்கள் ஆலோசனை கூட்டம் திருவொற்றியூர் டி.கே.பி. திருமண மாளிகையில் திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு ஏற்பாட்டில் நடைபெற்றது. சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மற்றும் சி.எம்.டி.ஏ.உறுப்பினர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில் பாக முகவர்கள் அடையாள அட்டை வழங்கினார். வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் அயலக அணி தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி, மீனவர் அணி துணை தலைவர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., திருவொற்றியூர் தொகுதி பார்வையாளர் சி.தசரதன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். பகுதி அவைத்தலைவர் ஆர்.சி.ஆசை தம்பி, பகுதி துணை செயலாளர் எம்.வீ.குமார், ஆர்.எஸ்.சம்பத், கே.பிரபாவதி, இரா.குமரேசன் ஆகியோர் வரவேற்றனர். மாவட்ட அவைத்தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன், வி.ராமநாதன், இரா. முருகேசன், டி.ஏ.ராஜ், சாந்தி பக்தன், தா.கார்த்திகேயன், டி.சி.வி.மணிகண்டன், எம்.எல்.சரவணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பகுதிச் செயலாளர் தி.மு. தனியரசு ஏற்பாட்டில் - திருவொற்றியூர் கிழக்குப் பகுதி

பாக முகவர்கள் பி.எல்.ஏ.- 2 - பணிக்குழுவினர் ஆலோசனைக் கூட்டம்!

தலைமை: மாதவரம் எஸ்.சுதர்சனம்! கலாநிதி வீராசாமி - கே.பி.சங்கர் - சி.தசரதன் பங்கேற்பு!

சென்னை, அக்.29

தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் தளபதி அவர்களின் உத்தரவின் படி இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம்.எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. அறிவுறுத்தலின் படி

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில் திருவொற்றியூர் தொகுதிக்கு உட்பட்ட கிழக்கு பகுதிக்கு அடங்கிய பாகம் என் 151 முதல் 311 வரை உள்ள BLA2 பாக முகவர்கள் மற்றும் பணிக்குழுவினர்கள் ஆலோசனை கூட்டம் திருவொற்றியூர் டி.கே.பி. திருமண மாளிகையில் நடைப்பெற்றது.

நிகழ்ச்சி ஏற்பாடினை திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் மண்டலக் குழு தலைவர் தி.மு.தனியரசு செய்திருந்தார்.

பகுதி அவைத்தலைவர் ஆர்.சி.ஆசை தம்பி, பகுதி துணை செயலாளர் எம்.வீ.குமார், ஆர்.எஸ்.சம்பத், கே.பிரபாவதி, பொருளாளர் இரா.குமரேசன் ஆகியோர் வரவேற்றனர்.

சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மற்றும் சி.எம்.டி.ஏ.உறுப்பினர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையேற்று பாக முகவர்கள் அடையாள அட்டை வழங்கினார்.

வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் அயலக அணி தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி, திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் மீனவர் அணி துணை தலைவர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., திருவொற்றியூர் தொகுதி பார்வையாளர் மற்றும் ஆதி திராவிடர் நலக் குழு துணை செயலாளர் சி.தசரதன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

மாவட்ட அவைத்தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன், செயற்குழு உறுப்பினர்

வி.ராமநாதன், பொதுகுழு உறுப்பினர்கள் இரா. முருகேசன், டி.ஏ.ராஜ்,

சாந்தி பக்தன், வட்ட கழக செயலாளர்கள் தா. கார்த்திகேயன், டி.சி.வி. மணிகண்டன், எம்.எல்.சரவணன், எஸ்.தமிழ் செல்வன், குறுத்து சி. முனுசாமி, கவி.சதிஷ் குமார், கேபிள் டிவி எம்.ராஜா, இரா.சந்தர், ஏகா.கார்த்திகேயன் ஆகியோரின் முன்னிலையில் நடைபெற்றது.

இதில் BLC பாக முகவர்கள், BL2 பாக முகவர்கள் கழக தோழர்கள், இளைஞர்கள் ஆகியோருக்கு எவ்வாறு எல்லாம் பணிகள் செய்ய வேண்டும் என்றும் வருகின்ற நாடாளுமன்ற தேர்தலில் எவ்வாறு வெற்றி பெற வேண்டும் என்று குறுத்தும் எடுத்துரைத்தனர்.

இதில் மாவட்ட பிரதிநிதிகள், எஸ்.பாஸ்கர், ஓய்.நந்திவர்மன், ஆர்.ரஜினிபாபு, டி.டி.எம்.பாபு, வி.பழனிவேல், பி.எஸ்.சைலஸ், ஆர்.டில்வி, ம.ஜெயராமன், கே.கார்த்திகேயன், ம.எத்திராஜ், அ.அப்துல் சலிம், ப.சந்தானகிருஷ்ணன்,

வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட பகுதி வட்ட அணிகளின் நிர்வாகிகள், கழக தோழர்கள் கழக மூத்த முன்னோடிகள் ஏராளமான மகளிர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மற்றும் இக் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் தனியரசு ஏற்பாட்டில் அறுசுவை உணவு மட்டன் பிரியாணி மற்றும் இனிப்பு போன்றவை மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி ஆகியோர் வழங்கினர்.

கிழக்குப் பகுதி துணை செயலாளர் ஆர்.எஸ்.சம்பத் நன்றி கூறினார்.

சென்னை வடகிழக்கு மாவட்ட பகுதி, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் -

அனைத்து அணிகளின் நிர்வாகிகள் அவசர ஆலோசனை கூட்டம்!

மாவட்ட கழகச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., அறிவிப்பு!

சென்னை வடகிழக்கு மாவட்ட பகுதி ஒன்றிய பேரூர் கழக செயலாளர்கள் திமுக அனைத்து அணி நிர்வாகிகள் அவசர ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கழக அவை தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன் தலைமையில் 30.10.2023 திங்கட்கிழமை மாலை 4.00 மணி அளவில் லட்சுமிபுரம், PR.H ரோடில் அமைந்துள்ள இந்திராணி அனுமந்த மஹாலில் நடைபெறுகிறது. இதில் கீழ்க்காணும் பொருள் குறித்து ஆலோசனை செய்ய இருப்பதால் சென்னை வடகிழக்கு மாவட்ட நிர்வாகிகள் முன்னாள் இன்னாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், அனைத்து அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் நிர்வாகிகள் மாவட்டத்தில் அடங்கிய பகுதி கழக ஒன்றிய கழக பேரூர் கழக செயலாளர் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி அவர்கள் அறிவித்துள்ள BAN. NEET நீட் எதிர்ப்பு கை எழுத்து ஆன்லைன் செயலியில் ஆதரவு தருவது. 05.11.2023 அன்று திருவள்ளூரில் நடைபெற உள்ள பாகமுகவர்கள் (BLA 2) கூட்டம்.

வருகிற 17.12.2023 அன்று சேலத்தில் நடைபெறும் திமுக இளைஞரணி மாநாடு. மாரத்தான் ஓட்டம், பேச்சு போட்டி, நூலகம் திறத்தல், இல்லந்தோறும் இளைஞரணி ஆகியவை சம்பந்தமாக ஆலோசனை

2024 நாடாளுமன்ற தேர்தல் வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் மற்றும் 04.11.2023 05.11.2023, 18.11.2023 19.11.2023 ஆகிய நாட்களில் நடைபெறும் சிறப்பு வாக்காளர் சேர்ப்பு முகாம் மற்றும் கழக ஆக்கப் பணிகள்

மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ.,
செயலாளர் சென்னை வடகிழக்கு மாவட்ட தி.முக.

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தலின்படி நீட் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தும் கையெழுத்து முகாமினை சென்னை வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.இளையஅருணா துவக்கி வைத்தார். இதில் இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி, இராயபுரம் மேற்கு பகுதி செயலாளர் வ.பெ.சுரேஷ் வட்ட செயலாளர் இரா.பாலன் மற்றும் மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர்.

பகுதிச் செயலாளர் எஸ்.முரளி தலைமையில்

மயிலை கிழக்குப் பகுதி அனைத்து வட்டங்களில் கொடிப் பறக்குது நிகழ்ச்சி!

மயிலை த.வேலு எம்.எல்.ஏ. - தமிழச்சி தங்கபாண்டியன் பங்கேற்பு!

சென்னை, அக் 29-

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதி தி.முக சார்பில் மயிலை தொகுதியில் கொடி பறக்குது மயிலை கிழக்கு பகுதி அனைத்து வட்டங்களிலும்

புதிய கழக கொடியேற்றும் நிகழ்ச்சி இன்று (29.10.2023) காலை 8 மணியளவில் நடைபெறுகிறது.

மயிலை கிழக்கு பகுதி கழக மூத்த முன்னோடிகள் கொடியேற்றுவார்கள் மயிலை கிழக்கு பகுதி கழக செயலாளர் எஸ்.முரளி தலைமை வகிக்கிறார்.

மயிலை மேற்கு பகுதி கழக செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி., எஸ்.முனுசாமி, பி.எல்.தாஸ், ஏ.குமாரி, எல்.உதயகுமார், அ.தவநேசன், வி.வெற்றிவேல், கோ.கண்ணன், துரை பார்த்திபன், பா.பொன்னுசாமி, திருமதி கீதாமுரளி எம்.சி., விமலா கிருஷ்ணமூர்த்தி எம்.சி., அ.ரேவதி எம்.சி. ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

மா.பா.அன்பு, ஏ.தாஸ், கழக மூத்த முன்னோடிகள் உடன் கொடி ஏற்றுபவர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி.

மாநில மாவட்ட நிர்வாகிகள் எஸ்.மோகன், நந்தனம் நம்பிராஜன், மு.தம்பிதுரை, சி.தசரதன், ஜெ.அருண், கலைகதிரவன், ஆ.சந்திரசேகர், நந்தனம் வேதா, மு.சத்யா, கே.மலர், என்.அன்பழகன், கோ.சு.மணி, செல்வி சௌந்தரராஜன், மந்தைவெளி அ.பாபு, யோகேஷ்ரவி, வேலு சம்பந்தம், எம்.ஆறுமுகம், அ.வாசுதேவன் ஜெ.ஜானகிராமன், ஜி.டி.அம்பேத்கர், மயிலை மேற்கு பகுதி கழக நிர்வாகிகள் ஆர்.எல்.வி.அசோக்குமார், பா.பாக்கியதாஸ், அகல்யா விஸ்வநாதன், ஜி.முருகையன், ஜி.ஆர். இராஜேந்திரன், மயிலை பகுதி வட்ட செயலாளர்கள் டி.ராஜவேலு, சீ.கிருஷ்ணமூர்த்தி, எஸ்.ஆர்.ராஜா சுரேஷ்குமார், அ.நாகராஜன், மு.இ.ஏழுமலை, மூ.இராஜேந்திரன்,

அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், ராஜா அன்பழன் எஸ்.சரவணன், எஸ்.பானுசலீம், விஜய்வெங்கடேசன், ஆர்.கதிரவன், ஆர்.பானு, மோனிஷா, சி.கணேஷ் பாண்டியன், ம.ஆனந்தன், பூலியூர் டி.மோசஸ், ச.சண்முகநாதன், சாந்தோம் ஆ.அந்தோணி, ஜெ.ஜெகன் ராஜ் ஆர்.குமரன் ஏ.சத்தியமூர்த்தி கோ.சக்திவிக்னேஷ் என்.எஸ்.பாலசுப்பிரமணி, ரா.சக்கரவர்த்தி, கே.வெங்கட்ர ராமன், பி.கே.ராஜேஷ்கண்ணா, மயிலை மேற்கு பகுதி மாவட்டபிரதிநிதிகள் ச.லோகநாதன், வீ.செங்கு ட்டுவன் வேன், சிவா, நா. சேகர் மு.ஏ.முல்லை வேந்தன், கே.விஜயகுமார், ந.கிருஷ்ணகுமார், ம.எழில்ராஜ், மயிலை பகுதி அனைத்து அணிகளின் துணை அமைப்பாளர்கள், த.விக்னேஸ்வரன் மு.சதீஷ், ம.மஞ்சு, லஷ்மி உதயகுமார், ரேவதி பொன்னுசாமி மற்றும் பலர் பங்கேற்கின்றனர்.

நன்றியுரை: மு.உதய சூரியன் சா.ராஜீ தா.வின்சென்ட் பி.ரமேஷ் ஆர்.கலைசேகரன் கே.கந்தவேல்.

ஆயிரம் விளக்கு தொகுதி பாக முகவர்கள் (BLA 2) கூட்டம்!

மா.பா.அன்புதுரை - வினோத் வேலாயுதம் அறிவிப்பு!

சென்னை, அக். 29-

கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆலோசனைக் கிணங்க ஆயிரம் விளக்கு தொகுதி பாக முகவர்கள் (BLA 2) கூட்டம் தேனாம்பேட்டை டி.யூ.சி.எஸ் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு தலைமை தாங்குகிறார்.

கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி,

கழக மருத்துவ அணி செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். தொகுதி பார்வையாளர் கலைகதிரவன் கலந்து கொள்கிறார்.

இக்கூட்டத்திற்கு மாவட்ட நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர், பாக முகவர்கள் (BLA 2) அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதிச் செயலாளர் மா.பா. அன்புதுரை, ஆயிரம் விளக்கு மேற்கு பகுதிச் செயலாளர் வினோத் வேலாயுதம் ஆகியோர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

ரூ.20 கோடி கேட்டு மர்ம நபர்

ரிலையன்ஸ் அதிபர் முகேஷ் அம்பானிக்கு கொலை மிரட்டல்!

மும்பை போலீஸ் விசாரணை!

மும்மை, அக். 29 -

ரிலையன்ஸ் அதிபர் முகேஷ் அம்பானிக்கு வந்துள்ள கொலை மிரட்டல் குறித்து மும்பை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

நாட்டின் முன்னணி கோடீஸ்வரர்களில் ஒருவரான ரிலையன்ஸ் அதிபர் முகேஷ் அம்பானிக்கு நேற்று முன்தினம் மர்ம நபர் ஒருவர் மிரட்டல் விடுத்து மின்னஞ்சல் அனுப்பியுள்ளார். அதில் தனக்கு 20 கோடி ரூபாயை முகேஷ் அம்பானி தர வேண்டுமென்றும், இல்லையெனில் அவர் துப்பாக்கியால் சுட்டு கொலை செய்யப்படுவார் என்றும் மிரட்டல் விடுத்துள்ளார்.

திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

நீட் தேர்வை எதிர்த்து மாபெரும் கையெழுத்து இயக்கம்!

மாவட்ட கழகச் செயலாளர் - திருத்தணி எஸ்.சந்திரன், எம்.எல்.ஏ., அறிவிப்பு!

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி கழக இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணிகள் இணைந்து நீட் விலக்கு நம் இலக்கு என்ற கோஷத்தை முன்னிறுத்தி "நீட்" தேர்வை ரத்துச் செய்யக்கோரி "மாபெரும் கையெழுத்து இயக்கம்" நாளை 30-10-2023 திங்கள்கிழமை மாலை 4.00 மணியளவில்திருவள்ளூரில் உள்ள ஸ்ரீ நிக்கேத்தன் மெட்ரிக் & ABS பள்ளி வளாகம்" அருகில் நடைபெற உள்ளது.

அதுசமயம் நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர், தலைமை செயற்குழு உறுப்பினர், மாநில நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய கழக, நகர கழக, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாவட்ட இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணியைச் சேர்ந்த அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், தொ.மு.ச. நிர்வாகிகள் உள்ளிட்ட கழக தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்துக் கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

திருத்தணி எஸ்.சந்திரன்,எம்.எல்.ஏ.,
செயலாளர், திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.